Reg. No. | | | | | | |

# பத்தாம் வகுப்பு–காலாண்டுப் பொதுத் தேர்வு – 2018

நேரம்: 2½ மணி) **தமிழ் – முதல் தாள்** (மொத்த மதிப்பெண்கள்: 100

**LANGUAE-PART-I- TAMIL -PAPER I**

(செய்யுள், உரைநடை)

அறிவுரை: (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும், அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு நிற மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு: i) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

ii) வினா எண் 49–க்கான விடை மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

## பிரிவு–I (மதிப்பெண்கள்: 20)

### பகுதி- 1

I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : 6×1=6

1. திருக்குறளை முதன்முதலில் பதிப்பித்தவர்
(அ) பரிமேலழகர் (ஆ) ஞானப்பிரகாசன் (இ) மணக்குடவர்
2. கம்பராமாயணம் .......... காண்டங்களை உடையது
(அ) ஐந்து (ஆ) ஆறு (இ) எட்டு
3. நல் என்னும் அடைமொழி பெற்ற நூல்
(அ) நல்திணை (ஆ) நற்றிணை (இ) நாலடியார்
4. இன்றைய மதுரையில் அமைந்த தமிழ்ச்சங்கம்
(அ) இரண்டாம் (ஆ) நான்காம் (இ) மூன்றாம்
5. உலகம், உயிர், கடவுள் மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியம் பெரியபுராணம் என்றவர் (அ) சேக்கிழார் (ஆ) மகாவித்வான் மீனாட்சிசுந்தரனார் (இ) திரு.வி.க
6. ஏற்றுமதி, இறக்குமதி குறித்துக் கூறும் நூல்
(அ) பரிபாடல் (ஆ) மதுரைக்காஞ்சி (இ) அகநானூறு

### பகுதி- 2

II கோடிட்ட இடத்தை நிரப்புக : 6×1=6

7. திருப்பெருந்துறை அமைந்துள்ள மாவட்டம்.....................................
8. குகன்.......................என்னும் பறை உடையவன்
9. நால்வகைப் பாக்களும் வயலுக்கு .......... அமைந்துள்ளன.
10. அம்பேத்கர் மும்பையில் சிறிது காலம் ............ பேராசிரியராகப் பணியாற்றினார்
11. இலக்கியக்கூறுகள் என்பவை மருந்தின் மேலிட்ட .................. போன்றவை
12. பெரியார் சமூக ........................ எதிர்த்தவர்

### பகுதி- 3 4×1=4

III. பொருத்துக :

| | | |
|---|---|---|
| 13. செறு | – | விதை |
| 14. வித்து | – | பனையோலைப்பெட்டி |
| 15. யாணர் | – | வயல் |
| 16. வட்டி | – | புது வருவாய் |

### பகுதி- 4

IV. விடைக்கேற்ற வினா அமைக்க : 4×1=4

17. பெண்கள் உரிமைப்பெற்றுப் புது உலகைப் படைக்கவேண்டும் என்று விரும்பியவர் பெரியார்.
18. செய்திப்படங்கள் வாயிலாக நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே கண்டுகளிக்கலாம்.
19. தமிழர்கள் அரபு நாட்டுடனும் யவன நாட்டுடனும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள்.
20. இலெமூரியாவை மனித நாகரிகத் தொட்டில் என்பர்

## பிரிவு–II (மதிப்பெண்கள் - 20) பகுதி-1

V. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தினுக்கு 3 வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும் : 5×2=10

21. நன்றிக்கு வித்தாவது எது?
22. பழியிலா மன்னனாய் வாழ்பவனின் பண்புகளாகக் கணிமேதாவியார் குறிப்பிடுவன யாவை?
23. குகனின் வேண்டுகோள் என்ன?
24. மூத்த திருநாவுக்கரசு, வாழைக்குருத்தை அரியும்போது என்ன நடந்தது?
25. செய்யுள் நன்னெறிகள் எவை?
26. செல்வமெனச் சான்றோர் எதனைக் கூறுவர்?
27. தமிழ் தரும் பல்வகைச் சுவைகளை எழுதுக.

(திருப்புக

பகுதி-2

VI கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தினுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும் : 5×2=10

28. உலகில் உள்ள மொழிகளுள் இலக்கிய, இலக்கண வளமுடைய மொழிகள் எத்தனை?
29. மொழிமாற்றம்–விளக்கம் தருக.
30. கொடுங்கடலால் கொள்ளப்பட்ட தமிழகப் பகுதிகள் யாவை?
31. மனித உரிமைக்காக நடத்தப்பட்ட போராட்டங்களை எழுதுக.
32. மேடைப் பேச்சில் மக்களை ஈர்த்தவர்கள் யாவர்?
33. தமிழ் இலக்கிய வளம் குறித்துக் கமில்சுவலபில் கூறும் கருத்து யாது?
34. இசை மரபுகளை வெளிப்படுத்திய நூல்கள் இரண்டினை எழுதுக.

பிரிவு-III (மதிப்பெண்கள் - 24) பகுதி-1

VII கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றினுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும் : 3×4=12

35. சிலப்பதிகாரம் காட்டும் சோழ நாட்டு மன்னர்களின் சிறப்புகள் யாவை?
36. தமிழ் மொழி வளர்ச்சி அடைவதற்குப் பாரதிதாசன் கூறும் வழிவகைகள் யாவை?
37. குகன் படகைச் செலுத்திய விதத்தை எழுதுக.
38. நற்றிணைப் பாடலின்வழி தலைவனுக்குத் தோழி கூறும் செய்தி யாது?
39. கண்ணகனார் –குறிப்பு வரைக.

பகுதி-2

VIII கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றினுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும் : 3×4=12

40. மணக்கொடை மறுப்பும் கைம்மை ஒழிப்பும் பற்றிப் பெரியார் கூறுவன யாவை?
41. அம்பேத்கர் பெற்ற கல்வித் தகுதிகள் யாவை?
42. பேச்சின் முக்கூறுகளுள் ஒன்றான எடுத்தல் பற்றி எழுதுக.
43. கடல் வாணிகம் குறித்து எழுதுக.
44. பேச்சின் அணிகலன்கள் யாவை?

பிரிவு–IV (மதிப்பெண்கள் - 10)

IX. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும் : 5×1=5

45. குட்டிச் செவியறுத்துக் கூட்டித் தலைகளெல்லாம்
வெட்டிக் களைபறிக்க மேலாய்த்தூர்– கட்டி
வளர்ந்தனை பால்முந்திரிகை வாழைக் கனியாய்க்
கிளர்ந்தகரும் பாய்நாளி கேரத்து–இளங்கனியாய்

1. இப்பாடலின் நூல் பெயர் என்ன?
2. இப்பாடலின் ஆசிரியர் யார்?
3. செவியறுத்து–பிரித்து எழுதுக.
4. நாளிகேரம் பொருள் எழுதுக.
5. இப்பாடலில் பயின்றுள்ள அடி எதுகைகளை எடுத்து எழுதுக.

46. கீழ்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும் : 5×1=5

நடிகர்களின் நடிப்பையும், பாடும் பாடல்களையும் உரையாடல்களையும் ஒலிப்பதிவு செய்வர். உரையாடலில் எழும் ஒலி அலைகள் ஒரு நுண்ணொலிப்பெருக்கியைத் தாக்கும். நுண்ணொலிப் பெருக்கி ஒலியலைகளை மின் அதிர்வுகளாக்கும். மின் அதிர்வுகள் பெருக்கப்பட்டு ஒருவகை விளக்கினுள் செலுத்தப்படுகின்றன. அம்மின்னோட்டத்திற்குத் தக்கவாறு விளக்கின் ஒளி மாறும். இவ்வொளி படச்சுருளின் விளிம்பிலுள்ள பகுதியில் விழுந்து, அங்கு அஃது ஒலிப்பாதையைத் தோற்றுவிக்கும்.

1. எதை ஒலிப்பதிவு செய்வர்?
2. நுண்ணொலிப்பெருக்கியைத் தாக்குவது எது?
3. விளக்கினுள் செலுத்தப்படுவன யாவை?
4. விளக்கின் ஒளி மாறும். எதனால்?
5. இவ்வுரைப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பிடுக.

பிரிவு–V (மதிப்பெண்கள் - 26) பகுதி-1

X. கீழ்க்காணும் வினாக்களுக்கு பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க : 2×8=16

47. (அ) ஒழுக்கமுடைமை பற்றித் திருவள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக. (அல்லது)
(ஆ) அப்பூதியடிகளார் இல்லத்தில் நிகழ்ந்ததை விவரிக்க.

48. (அ) செம்மொழிக்குரிய எவையேனும் ஐந்து தகுதிப்பாடுகளை விளக்கி எழுதுக.
(அல்லது)
(ஆ) கருத்துப்படம் , செய்திப்படம் ,விளக்கப்படம், கல்விப்படம் குறித்து எழுதுக.

49. பின்வரும் மனப்பாடப் பாடலை அடிபிறழாமல் எழுதுக : பகுதி-2 2+2+3+3=10
(அ) அழுக்கா– எனத் தொடங்கும் குறள்
(ஆ) பவா– என முடியும் குறள்
(இ) துன்புள– எனத் தொடங்கும் கம்பராமாயணப்பாடல்.
(ஈ) யான் என்றார் –என முடியும் பெரியபுராணப் பாடல்.